**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 246 of 2024

Deposition of D.W. 1

Name of the Witness: திரு.மூர்த்தி

Date : 03.11.2025

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

9) பாகபிரிவினையில் என் அப்பாவிற்கு அவர் எதுவும் சொத்துக்கள் வைத்து கொள்ளவில்லை. என் அப்பா பெயரில் பாகபிரிவினைக்கு பிறகு பட்டா எதுவும் ஏற்படவில்லை. சர்வே எண் 1/1, சர்வே எண் 1/2 என் அப்பா பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். என் அப்பா பாகம் பிரித்து கொடுத்ததாக சொல்வதே தவறு என்றால் சரியல்ல. சிறு குறு விவசாயிகளின் சான்றிதழை பெறுவதற்காக என் அப்பா பெயரிலும், 1ம் பிரதிவாதி பெயரிலும் பட்டா இருந்து வந்தது என்றால் சரியல்ல. என் அப்பா சொத்துக்களை பிரிப்பதற்கு முன்பாக சொத்துக்களின் வரவு, செலவுகளை பார்த்து வந்தார். பாகபிரிவினைக்கு பிறகு அவர் அவர்கள் பார்த்து கொண்டோம். தாவா 2ம் இன சொத்தை தவிர நானும், 1ம் பிரதிவாதியும் வேறு சொத்துக்கள் வாங்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா 2ம் இன சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் என்று இந்த வழக்கில் பதில் போட்டுள்ளார் என்றால் சரியல்ல.

10) 3ம் தரப்பினருக்கு சொத்துக்களை பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ. 10 கிரைய ஆவணங்கள் 2002, 2006 விற்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த கிரைய பத்திரங்கள் மூலமாக நான், என் அப்பா, 1ம் பிரதிவாதி சேர்த்து தான் விற்றோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மட்டும் தான் விற்றார். பி.வா.சா.ஆ.8 கிரைய பத்திரம் சொத்துக்களை விற்பனை செய்ததற்கு நானும், என் அப்பா, 1ம் பிரதிவாதி கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரிதான். அதில் என் அப்பாவிற்கு கிரையம் மூலமாகவும், பட்டா மூலமாகவும் சொத்து பாத்தியம் என்றும், 1, 2 பிரதிவாதிகளுக்கு வாரிசு படி பாத்தியம் என்றும், அதில் எங்களின் சுவாதீனத்தில் உள்ளதும், எங்கள் குடும்ப அபிவிருத்தி கடனுக்காவும், சில்லறை கடன்களை தீர்ப்பதற்காகவும் சொத்துக்கள் விற்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் மற்ற பி.வா.சா.ஆ. 3 முதல் பி.சா.ஆ.7, பி.வா.சா.ஆ9, பி.வா.சா.ஆ.10 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ10 ஆவணங்கள் 1ம் பிரதிவாதியின் பாக சொத்துக்கள் விற்பதாக நான் சொல்லப்பட்டிருப்பது தவறு என்றால் சரியல்ல. எங்களின் திருமண செலவிற்காகவும், குடும்ப செலவிற்காகவும் என் அப்பா மேற்சொன்ன ஆவணங்கள் மூலம் சொத்துக்களை விற்றார் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் வாரிசுகள் என்றால் சரிதான். என் மகன் அன்பழகனுக்கு திருமணமாகவில்லை. என் மகள் மைதிலிக்கு 2 வருடத்திற்கு முன்பு நான் தான் திருமணம் செய்து வைத்தேன். என்

மகன் அன்பழகன் வேறு சொத்து எதுவும் அவர் பெயரில் வாங்கவில்லை.

*11)* வா.சா.ஆ.10 பாகபிரிவினை பத்திரம் 01.10.2020ல் நான், என் மகன், என் மகள் 2, 4, 5 பிரதிவாதிகள் ஒரு பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான். அதில் பட்டா படி சொத்துக்கள் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு வாய்மொழி பாகபிரிவினை படி பாத்தியம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான், 4, 5 பிரதிவாதிகள் பாகபிரிவினை பத்திரம் செய்து கொள்ளும் போது பொது குடும்ப நிதி என்று எதுவும் கிடையாது. என் மகளுக்கு நான் ரூபாய் 25,000/- பணம் கொடுத்தேன். தாவா 1ம் இன சொத்து 4ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதிக்கு நான் தான் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.10ல் சொத்துக்கள் பாகம் பிரித்து விட்டது எனவும், இனிமேல் பாகம் பிரித்து கொள்ள எதுவும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த பாகப்பிரிவினை பத்திரம் 7ம் பிரதிவாதி முன்னிலையில் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவர் சாட்சி கையெழுத்து தான் போட்டுள்ளார். வாதியின் பாகத்தை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் வா.சா.ஆ.10 என்னால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதிக்கு அவர் குடும்பத்தில் ஒரு ஏக்கர் நிலம் உள்ளது என்றால் அதை பற்றி அவரிடம் தான் கேட்கவேண்டும்.

12) வா.சா.ஆ.11 கிரைய பத்திரம் 06.09.2021 தேதியில் 4ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கு தாவா 1ம் இன சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரம் வாதியை ஏமாற்றுவதற்காக ஏற்பட்டது என்பதால் தான் குடும்பமே இல்லாத 4ம் பிரதிவாதிக்கு குடும்ப செலவு கிரையம் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் கிரைய தொகை ரூபாய் 9 லட்சம் 7ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு கொடுக்கவே இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 அடமான பத்திரம் மூலமாக 15.12.2021 தேதி 7ம் பிரதிவாதி 8ம் பிரதிவாதியிடம் கடன் பெற்றதாக பொய்யாக வாதியை ஏமாற்றுவதற்காக அந்த ஆவணம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.12 ஆவணங்கள் வாதிக்கு தாவா சொத்தில் உள்ள உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

13) வா.சா.ஆ.1 17.03.1974 என் அப்பா பழனிகவுண்டர் பேரில் உள்ள தாவா 1ம் இன சொத்தில் 1.66 ஏக்கர், சர்வே எண் 1/1ல் 4.34 ஏக்கரும் வாங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த கிரைய பத்திரம் வாதியிடம் இருந்ததால் தான் தாவா 1ம் இன சொத்திற்கு முதலில் 1.40 சென்ட் என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பின்னிட்டு 1ம் பிரதிவாதி அவருடைய பதிலுரையில் 4 ஏக்கர் 1 சென்ட்டும் குடும்ப சொத்து என்று சொன்னதால் பின்னிட்டு இந்த வழக்கில் சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா பின்னிட்டு சொத்தை பாகம் பிரிக்கும் போது யாருக்கு இந்த சொத்து

ஒதுக்கப்படுகிறதோ வா.சா.ஆ.1 அசல் கிரைய பத்திரத்தை கொடுக்க சொல்லி வாதியிடம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்து பொது குடும்ப சொத்துக்கள் என்பதால் தான் வாதியும் வா.சா.ஆ.13 கந்தாயம் செலுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல.

14) எட்டியம்மாள் வகையறா பாலக்கோடு சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 170/2021 என்ற வழக்கு போட்ட விவரம் வாதிக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சர்க்கரை வியாதி காரணமாக நடக்க முடியாமல் இருக்கிறார் என்றால் தெரியாது, பிரிந்து போனதிலிருந்து நான் தனியாக இருக்கிறேன். என் அப்பா இறந்த பிறகு நான் தான் தாவா சொத்துக்களை நிர்வகித்து வருகிறேன் என்றால் சரியல்ல. 18.07.2021ல் பாகம் பிரித்து கொடுக்க சொல்லி வாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் கேட்டார்கள் என்றால் சரியல்ல.

15) வா.சா.ஆ.9 05.08.2010 தேதி என் மனைவி பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தேன் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று வாதி பரிகாரம் கேட்டுள்ள நிலையில் நான் என்னுடைய பதிலுரையில் அதை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 20.07.2021 அன்று வில்லங்க சான்றிதழ் பெற்ற போது தான் வா.சா.ஆ.9 பற்றி வாதிக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்கள் சம்பந்தமாக பாகம் ஏற்படவில்லை என்று தான் பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்றால்

சரியல்ல. பாக பிரிவினை ஏற்படவில்லை என்பதால் என் அம்மா 3ம் பிரதிவாதியும் எந்த பதிலுரையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தூண்டுதல் பேரில் தான் வாதி இந்த வழக்கு போட்டு இருப்பதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

16) வாதி போட்ட அசல் வழக்கு எண் 246/2024 பாகபிரிவினை வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றாலும், 7ம் பிரதிவாதி போட்டுள்ள அசல் வழக்கு எண் 109/2022 வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.